<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>

<u>**STC No.454/2024**</u>

எதிரி ஆஜர்

அ.சா.– 1 திரு. ஞானேஸ்வரமூர்த்தி த/பெ. ராஜன் நாள் – 10.02.2026

**குறுக்கு விசாரணை–**

நான் 2021 ம் ஆண்டு என்ன தொழில் செய்து கொண்டிருந்தேன் என்றால் பாத்திர கடை வைத்திருந்தேன். டிரான்ஸ்போர்ட் தொழிலும் செய்து வந்தேன். நான் எத்தனை காசோலை வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்துள்ளேன் என்று கேட்டால் ஏற்கனவே ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் தற்போது ஒரு வழக்கு மட்டும் தான் நிலுவையில் உள்ளது. அந்த காசோலை வழக்கு வட்டி கடனுக்காக என்று சொன்னால் சரிதான். நான் வட்டி தொழில் செய்கிறேனா என்றால் நான் தொழிலாக அது செய்யவில்லை. வேறு என்ன வகையில் நான் அதை செய்கிறேன் என்று கேட்டால் எதிரி கடைக்கு வருவார் அந்த பழக்கத்தின் பேரில் கடன் கேட்டார் நான் வெளியில் வாங்கி கொடுத்தேன். யாரிடமிருந்து பெற்று கொடுத்தேன் என்றால் எனது உறவினர் புகழரசன் த/பெ. கருணாநிதி என்பவரிடமிருந்து பெற்று கொடுத்தேன். சங்கரன், ஓய்வு பெற்ற ஆசிரியர், சண்முகம் ஆகியோரிமிருந்தும் பெற்று கொடுத்தேன். அவர்களிடமிருந்து ரூ.7 லட்சம், ரூ.10 லட்சம், ரூ.7 லட்சம் என பெற்றேன்.

நான் வருமானவரி செலுத்தி வருகிறேனா என்று கேட்டால் செலுத்தி வருகிறேன். 2021 க்கு முன்பிலிருந்தே செலுத்தி வருகிறேன். 2021 வருடதத்ில் எனது வருமான வரி கணக்கில் எவ்வளவு ஆண்டு வருமானம் காட்டியுள்ளேன் என்று கேட்டால் ஆவணத்தை பார்த்து சொல்ல முடியும். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்று கேட்டால் முடியும். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.30 லட்சத்தை அந்த வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியின் கணவர் பெயர் என்னவென்று கேட்டால் தெரியாது. எதிரியின் தந்தை பெயர் என்னவென்று கேட்டால் தெரியாது. எதிரிக்கு எத்தனை குழந்தைகள் உள்ளார்கள் என்று கேட்டால் தெரியாது.

அறிவுடைநம்பி எனது சகோததரா என்று கேட்டால் ஆம். எனது சகோதரர் STC.No.467/2024 என்ற வழக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எனது சகோதரர் எவ்வளவு தொகைக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டால் தெரியாது. நான் எதிரியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனது சகோதரருக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் கடையில் வைத்து. அப்போது உடன் யார் இருந்தார்கள் என்று கேட்டால் யாரும் இல்லை நானும், எதிரியும் மட்டும் தான் இருந்தோம். கடையில் வேலை செய்பவர்கள் அப்போது யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள விற்பனை பத்திரமான 1490/2014 யாருடைய பெயரில் உள்ளது என்று கேட்டால் எதிரி புவனேஸ்வரி

மற்றும் அருள் என்பவர்களின் பெயரில் உள்ளது. அந்த விற்பனை பத்திரத்தில் எதிரியின் இடம் எவ்வளவு உள்ளது என்று கேட்டால் 3 ஏக்கர். அவ்வாறு எதிரியின் பெயரில் எந்த நிலமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. மற்றொரு ஆவணம் என்ன கொடுத்தார் என்று கேட்டால் ஜெகதீஸ் என்பவர் பொது அதிகாரம் கொடுத்ததாக கூறி ஒரு ஆவணம் கொடுத்தார்.

விற்பனை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தை பொருத்து ஜெகதீஷ் பொது அதிகாரம் கொடுத்துள்ளாரா என்று கேட்டால் ஆம். விற்பனை ஆவணம் மற்றும் பொது அதிகாரம் அசல் என்னிடம் உள்ளதா என்று கேட்டால் உள்ளது. இரு ஆவணங்களும் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். பொது அதிகார பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எனக்கு அந்த இரு ஆவணங்களை பற்றியும் சரியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். ஆவணத்தை கொடுதது பணம் பெற்றார்கள். உண்மையில் பணம் கொடுத்திருந்தால் அந்த ஆவணத்தை பற்றி விவரங்கள் தெரிந்திருக்கும் என்று சொன்னால் எதிரி மீதிருந்த நம்பிக்கையின் பேரில் பணம் கொடுத்தேன். எதிரியை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்று கேட்டால் இரு வருடங்களாக. 2019 லிருந்து தெரியும். அருள் என்ற நபர் யாரென்று தெரியுமா என்று கேட்டால் அவர் யாரென்று எனக்கு தெரியாது எதிரி தனது தம்பி என்று கூறுவார். எதிரிக்கு அவ்வாறு ஒரு தம்பி கிடையாது என்று சொன்னால் எதிரி தான் அவ்வாறு சொன்னார்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.